செ.வெ.எண் : 14/அக்டோபர் நாள் : 10.10.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு நலத்திட்டங்கள் தொடர்பான "மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம்" மற்றும் "மாவட்ட ஆளுமை குழுக் கூட்டம்"**

**குழுவின் தலைவர்/ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கா.நவாஸ்கனி அவர்கள் தலைமையில்**

**குழுவின் உறுப்பினர் செயலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக "மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம்" மற்றும் "மாவட்ட ஆளுமை குழுக் கூட்டம்" குழுவின் தலைவர்/ இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கா.நவாஸ்கனி அவர்கள் தலைமையில் இன்று (10.10.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு குழுவின் உறுப்பினர் செயலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். குழு உறுப்பினர்/முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பாண்டி அவர்கள் பங்கேற்றார்.

இக்கூட்டத்தில் நடப்பு நிதியாண்டில் இதுநாள் வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், பிரதம மந்திரி வீடுகள் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தூய்மை பாரத இயக்கம், தேசிய ஊரக குடிநீர் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம், பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், தேசிய கிராம குடிநீர் திட்டம், மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டம் (e-NAM) ஆகிய திட்டங்களின் கீழ் பல்வேறு திட்டப் பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினங்கள், நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், நிலுவையில் உள்ள திட்டப்பணிகள் ஆகியவை குறித்தும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக வரவு, செலவு விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு ஆளுமைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.உ.திசைவீரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆ.சிவகாமி, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் திருமதி.சிவராணி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**